அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI
Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com



அ.எண் : 126 /2017
தேதி. : 31 /10/2017

# பருவமழை விளைவிக்கும் சவால்களை தகுந்த பாதுகாப்புடன் எதிர்கொள்வோம் சமக நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் அவர்கள் வேண்டுகோள்

திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி அருகே சுவர் இடிந்து விழுந்ததில், நித்யா என்ற மாணவி உயிரிழப்பு, கடலூர் அருகே வீட்டுச் சுவர் இடிந்து விழுந்ததில், லதா என்ற இளம்பெண் உயிரிழப்பு, நாகப்பட்டிணம் தீயணைப்பு நிலைய கட்டிடம் இடிந்தது, பட்டாபிராம் ரயில் நிலைய சுவர் இடிந்தது, என்ற அசம்பாவிதச் செய்திகளுடன் தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழை தொடங்கியுள்ளது.

வானிலை ஆய்வு மையம், மழை குறித்து அவ்வப்போது விடுக்கும் எச்சரிக்கை அறிவிப்புகளின் அடிப்படையில் பொதுமக்கள் கவனமாகவும், பாதுகாப்பாகவும் இருக்கவேண்டும்.

இரண்டு நாள் பெய்த மழைக்கே சாலைகளில் வெள்ளப்பெருக்கு, போக்குவரத்து பாதிக்கும் அளவு பழுதடையும் சாலைகள் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் இதே நிலை தொடர்வது, நகர் தொடர்பான உணர்வுகளிலும், அடிப்படைக் கட்டமைப்புகளை மேம்படுத்துவதிலும் பற்றாக்குறை நிலை நீடிப்பதையே உணர்த்துகிறது.(Lack of civic sense and basic infrastructure development). தற்காலிக நிவாரணப் பணிகளில் கவனம் செலுத்துவதோடு அல்லாமல், நிரந்தரமான தீர்வுகள் காண்பதில் அரசு மும்முரமாக ஈடுபடவேண்டும்.

வானிலை ஆய்வு மையம் தொழில்நுட்ப வசதிகளைக் கொண்டு, விஞ்ஞான முறையில், மழை குறித்த அறிவுப்புகளையும், எச்சரிக்கைகளையும் வெளியிட்டு வருகிறது. சற்றேறக்குறைய அந்த முடிவுகள் சரியானதாகவே இருக்கும். ஆனால், சமூக வலைத்தளங்களில், மிகக் கனமான மழைவரும், ஆபத்து வரும் என்றெல்லாம் நம்பமுடியாத, ஆதாரமற்ற தகவல்களை சிலர் பதிவு செய்கிறார்கள். இத்தயை வதந்திகளை யாரும் அப்படியே ஏற்று மறுபதிவு செய்யவோ, அனைவரும் பகிர்ந்திடுங்கள் என்று யாருக்கும் அனுப்பவோ வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இயற்கையை மீறிய சக்தி இல்லையென்றாலும், இயற்கையால் விளையும் சவால்களைச் சமாளிக்க நாம் கவனமாகவும், எச்சரிக்கையோடும் இருந்திட வேண்டும். மேலும் வீடுகள், அலுவலகங்கள், பிற கட்டடங்களில் மழைநீர் சேகரிப்பை மேம்படுத்தி, இயற்கையின் கொடையான மழை நீரை வீணாகாதவாறு சேமிப்போம் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும்அன்புடன்,

**ஆர்.சரத்குமார்** B.Sc.
நிறுவனத் தலைவர்